13.4.1904 கைலாசபிள்ளை.

நகல் - 1.

# நகல்

நகல்

228

13-4-1904

உ

ஸ்ரீ பண்டித சாமிநாத ஐயரவர்களுக்குச் சிறியேன் சி. கைலாசபிள்ளை எழுதிக் கொள்ளும் அதிவிநய விண்ணப்பம்:—

ஸ்வாமீ,

1. தங்கள் க்ஷேமாதிசயங்கள் எப்படி? தங்கள் புத்திரர் இப்போது என்ன வாசித்திருக்கிறார்; என்ன பரீக்ஷை கொடுத்திருக்கிறார்?

2. தாங்கள் சிலகாலத்துக்கு முன் அனுப்பிய புஸ்தகப் பிரதிகள் பெற்றுக் கொண்டேன். ஸ்ரீ குமாரஸ்வாமி முதலியார் சென்றவாரம் இங்கிலாந்துக்குப் பிரயாணமாகிவிட்டார். தம்முடைய சிவாலய புஸ்தகசாலைக்காக ஒரு வேதாகம சம்பு பத்ததி வியாக்கியானம் பிரதி பண்ணுவிக்கில் என்ன செலவு வரும் என்று தங்களை வினவியறியும்படி என்னைக் கேட்டிருந்தார். அது நிற்க.

3. தாங்கள் எழுதிவரும் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் எப்போது முடிவு பெறும்? சில வருஷங்களுக்குமுன்னும் நான் எழுதிய துண்டு,— ஞாபகம் இருக்குமே,— பிள்ளையவர்களது பிரபந்தத் திரட்டைக் குறித்து அது தமியேனுக்குப் பேராசையாய் விளைந்து மிக்கூர்கின்றது. அவர்கள் மாணாக்கர்கள் எல்லாரும் சிறிது சிறிது உபகரிப்பார்களானால், பிரபந்தத்திரட்டு ~~முற்றுப்~~ எங்ஙனுமே முற்றுப் பெறுமே. பிள்ளையவர்களது பிரபந்தங்களைப் படிக்கும் நல்வாழ்வு வாய்ந்தேன்றமியேனும் அதை உத்தேசித்து ரூபா பதினைந்து அனுப்புகிறேன். பெற்றுக் கொண்டு இம்முயற்சியை மேலிட்டு அவர்கள் மாணவர்களுக்கு மறிவாத்து ஒருங்கு சூழ்ந்து கையொப்பஞ் சேர்த்து, தொடங்குமாறு தங்களைப் பலகாலும் பிரார்த்திக்கின்றேன்.

4. இது விஷயமாக இதனோடு வருஞ்செய்யுளை உற்று நோக்கித் திருத்தி ஏற்றுக்கொள்க. பிள்ளையவர்கள் சரித்திரத்திலும், பிரபந்தத்திரட்டிலும் இச்செய்யுளும் முகவுரையாற் சேர்க்கப்படும் யோக்கியதை உடையதாமோ என்று கவல்கின்றேன். எப்படியும் ஸ்வாமிகளது சித்தம். இப்போது இச்செய்யுளிற் றாங்கள் திருத்தங்களைச் சிறியேனுக்குத் தெரிவிக்குமாறும் வேண்டுகின்றேன். இதனை மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகைக்கனுப்பி அதிற் பிரசுரிப்பிக்கட்டுமா?

நகல்



5. பிள்ளையவர்களது பெருநூல்களுள் அச்சில் வாராதன யாவை? திருஆரூர்த் தியாகராஜ லீலை அச்சில் வந்துளதா?

6. பெருங் கதை கிடைத்த அளவிலாவது அச்சிடப் போகிறீர்களா? அது சுத்தப்பிரதி காகிதத்திற் பண்ணிக் கொண்டீர்களா?

7. ஐங்குறு நூற்றுக்குச் சுவாமிகள் செய்துள்ள உரையும் பார்க்கும் நல்லூழ் தமியேற்கும் உண்டாமோ?

இங்ஙனம்,
மீளா அடிமை
நல்லூர். சிற். கைலாச பிள்ளை.

---

இலங்கை அரசியல் ஆயத்துத்
தமிழ்ப் பெருமுதலியார்.

கொழும்பு, Secretariat.
ஸ்ரீ குரோதி வருஷப் பிறப்பு.
13/Apr/04

நகல்

(27) 6. பக். 123

(7)

கொழும்பு
கைலாசபிள்ளையவர்கள் கடிதம்.
13-4-1904
2. பக்

Copied
K. Parthasarathy
19.11.20

✓ Copied in
த. க. VOL 'W'
p. 15 - 18.

(19)

1321